**செ. கு. எண்: 172** **நாள் : 04.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 29.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் வட்டம், தாவடிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் தமிழ்செல்வன்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கோங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு சிவா என்பவரின் மகன் வெங்கடேசன்;

30.11.2015 அன்று பூவிருந்தவல்வி வட்டம், கொத்தப்பாளையத்தைச் சேர்ந்த திரு. முரளி என்பவரின் மகன் சந்தோஷ்;

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கண்டவராட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு கோவிந்தசாமி என்பவரின் மகன் ஆகாஷ்;

2.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், புங்கத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிமுத்து என்பவரின் மகன் பாபு;

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனிசாமி என்பவரின் மகன் இந்திரன்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பொன்விளைந்தகளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகள் ஹேமமாலினி; சிட்லப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனிசாமி என்பவரின் மகன் செல்லன்; செங்கல்பட்டு வட்டம், சித்தமனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜு என்பவரின் மகன் தெய்வசிகாமணி; செங்கல்பட்டு வட்டம், கீழ்க்கரனை கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் சந்திரசேகர்; திருக்கழுக்குன்றம், ஜீவா நகரைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மகன் வேதகிரி;

——ஆகியோர் கன மழையின் காரணமாக வெள்ள நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

30.11.2015 அன்று தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கே. குமரெட்டையாபுரத்தைச் சேர்ந்த திரு பாலமுருகன் என்பவரின் மகன் தாமோதரன்;

1.12.2015 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்தன் என்பவரின் மகன் ராஜாமணி;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகரைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி சாவித்திரி;

விழுப்புரம் மாவட்டம், பூத்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரமூர்த்தி என்பவரின் மகன் ஆனந்த்; விக்கிரவாண்டி வட்டம், சோழகனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குணசீலன் என்பவரின் குழந்தை அஸ்வின்;

2.12.2015 அன்று மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், வெயில்வந்தாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மகள் தாமரைசெல்வி;

--- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

30.11.2015 அன்று சென்னை மாவட்டம், மைலாப்பூர் வட்டம், நொச்சிகுப்பத்தைச் சேர்ந்த திரு. ஜீவரத்தினம் என்பவரின் மகன் வேலு என்பவர் மழையின் காரணமாக படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

30.11.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பெத்திக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு ரவி என்பவரின் மகன் பாலாஜி;

1.12.2015 அன்று திருவள்ளூர் வட்டம், வெங்கத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு துரை உடையார் என்பவரின் மகன் குமார் மற்றும் சென்னை மாவட்டம், மயிலாப்பூர் வட்டத்தைச் சேர்ந்த திரு ஆனந்தராஜன் என்பவரின் மகன்

ஜான்சன் ஆகியோரும் மழையின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

2.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், புதுப்பட்டினம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மோகன் என்பவரின் மகன் பாரதி பாலத்திலிருந்து தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் தற்போது பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **22** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**